# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2006 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்*

---

*(2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, ஓகத்து மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 15.25** **தபாற் செலவு : ரூபா 7.50**

## 2006 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்

*[2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ— 33/2005*

***1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 39, 40, 41, 42 மற்றும் 43 ஆகிய பிரிவுகளை மாற்றீடு செய்தல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 39,40, 41,42, மற்றும் 43 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் பதிலிடப்படுகின்றன :—

*"நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற் பாடுகளுக்கு உரிமமளித்தல்.*

*39. (1) ஆளெவரும், பணிப்பாளர் தலைமையதிபதியால் அந்நோக்கத்துக்காக வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, ஏதேனும் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாட்டை அமைத்தலோ, தொழிற்படுத்துதலோ அல்லது அதில் ஈடுபடுத்தலோ ஆகாது.*

*(2) பணிப்பாளர் தலைமையதிபதி, நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாடுகள் தொடர்பில் 40 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் உரிமமளிக்கும் அலுவலரொருவருக்கு, உரிமங்கள் வழங்குவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது அதிகாரத்தை எழுத்தில், கையளிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*உரிமமளிக்கும் அலுவலர்களின் நியமனம்.*

*40. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 14அ என்னும் பிரிவின்*

கீழ், அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியால் அந்நோக்கத்துக்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களை உரிமமளிக்கும் அலுவலர்களாக, நிருவாக மாவட்டம் ஒவ்வொன்று தொடர்பிலும் நியமித்தல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவராக நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர், 39 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அத்தகைய அலுவலருக்கு எழுத்தில், கையளிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய கடமைகளைப் புரிதல் வேண்டும். உரிமமளிக்கும் அலுவலர் தனது கடமைகளைப் புரிகையில், பணிப்பாளர் தலைமையதிபதியின் பொதுப் பணிப்புக்கும் மேற்பார்வைக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

*உரிமத்திற்கான விண்ணப்பமும் அத்தகைய விண்ணப்பத்தின் சீர்தூக்கிப் பார்த்தலும்.*

41. (1) முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழான உரிமமொன்றை வழங்குவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் எந்த நிருவாக மாவட்டத்தினுள் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாடு அமைக்கப்பட, தொழிற்படுத்தப்பட அல்லது ஈடுபடுத்தப்பட முன்மொழியப்படுகின்றதோ அந்த நிருவாக மாவட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தோதான உரிமமளிக்கும் அலுவலருக்கு செய்யப்படல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விபரங்களினதும் பூரணமானதும் சரியானதுமான தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) உரிமமளிக்கும் அலுவலர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்று கொண்டுள்ள தகவல் மற்றும் விபரங்களைக் கருத்திற் கொண்டும் விண்ணப்பதாரர், 39 ஆம்

பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்படுவதற்காக ஏற்ற தன்மை தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட வாறான தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருக்கு மிடத்தும், விண்ணப்பதாரருக்கு அத்தகைய உரிமத்தை வழங்கலாம்.

(4) பொய்யான, தவறாக இட்டுச் செல்லும் அல்லது சரியற்ற தகவலை அல்லது விபரங்களைக் கொண்டிருப்பதாகக் காணப்படும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படுதல் வேண்டும்.

*உரிமமொன்றின் படிவமும் காலப் பகுதியும்.*

42. நாற்பத்தோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று —

(அ) அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடன் பணிப்பாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருத்தலும் ;

(ஆ) உரிமமொன்றில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதி மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவிருத்தலும் ;

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய தேதியில் தொழிற்படக்கூடியதாக இருத்தலும் ; அத்துடன்

(ஈ) அது முன்னரே கைமீட்கப்பட்டாலன்றி, உரிமத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான அக்காலப்பகுதிக்கு வலுவிலிருத்தலும்,

வேண்டும்.

*உரிமமொன்றைப் புதுப்பித்தல்.*

43. (1) நாற்பத்தோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று, முன்னதாக வழங்கப்பட்ட உரிமத்தின் முடிவுறும் தேதிக்கு முன்பு முப்பது நாட்களுக்குக் குறையாமல் விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தல் கட்டணத்துடன் அந்நோக்கத்துக்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் தோதான உரிம

மளிக்கும் அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பமொன்றின்மீது, புதுப்பிக்கப்படலாம்.

(2) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல் —

(அ) உரிமம் பெற்றவர், வழங்கப்பட்ட உரிமத்தின் நியதிகள் நிபந்தனைகளை மீறி அல்லது முரணாக எதனையும் செய்திருக்காதவிடத்து ;

(ஆ) உரிமம் பெற்றவர், இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியிருக்காதவிடத்து ;

(இ) உரிமம் பெற்றவர் 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களை பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் எவையேனும் ஏற்பாடுகளை மீறியிருக்காதவிடத்து ; அல்லது

(ஈ) சம்பந்தப்பட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாட்டைத் தொடர்வதானது சூழல்மீது ஏதேனும் மாறான தாக்கத்தைக் கொண்டிருக்காதவிடத்து,

உரிமமொன்றைப் புதுப்பிக்கலாம்.

(3) நாற்பத்திரெண்டாம் பிரிவில் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் புதுப்பித்தல்மீது வழங்கப்பட்ட உரிமமொன்று தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.”

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43அ, 43ஆ, 43இ, 43ஈ, 43உ மற்றும் 43ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் நாற்பத்து மூன்றாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகளை இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், அச் சட்டவாக்கத்தின் 43அ, 43ஆ, 43இ, 43ஈ, 43உ மற்றும் 43ஊ என்னும் பிரிவுகளாக பயனுறுதலும் வேண்டும் :—

*"உரிமமொன்றை இடைநிறுத்துதல்.*

43அ. (1) நாற்பத்தோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று —

(அ) அதிகாரசபையால் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் விளைவாக சேர்த்துக்கொள்ளப்பட்ட ஏதேனும் நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பேணுதல் அல்லது முகாமைத்துவ நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அது அவசியமாக வருமிடத்து ;

(ஆ) உரிமம்பெற்றவர், இச்சட்டத்தின் அல்லது 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின்கீழ் தவறொன்று புரிந்தமைக்காக குற்றஞ்சாட்டப்பட்டிருக்குமிடத்து ; அல்லது

(இ) உரிமம் பெற்றவர், இச்சட்டத்தின் அல்லது 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்துதல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் அல்லது அச்சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளின்கீழ் ஏதேனும் ஏற்பாட்டை மீறியிருக்குமிடத்து அத்துடன் அத்தகைய மீறுகையின் கடுமையானது உரிமத்தின் இல்லாதாக்கலொன்றை வலியுறுத்தாதவிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதியினால் இடைநிறுத்தப்படலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் உரிமமொன்று இடைநிறுத்தப்படுமிடத்து, உரிமம் பெற்றவர், உரிமம் வழங்கப்பட்டமைக்காக அவரால் செலுத்தப்பட்ட கட்டணத்தின் விகிதப்படியான மீள் கொடுப்பனவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

உரிமமொன்றை இல்லாதாக்கல்.

43ஆ. (1) நாற்பத்தோராம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று —

(அ) உரிமமானது, பொய்யான, தவறாக இட்டுச் செல்லும் அல்லது சரியற்ற தகவலை வழங்குவதன் மூலம் பெறப்பட்டது எனக் கண்டுபிடிக்கப்படுமிடத்து ;

(ஆ) உரிமம் பெற்றவர் இச்சட்டத்தின்கீழ் அல்லது 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(இ) உரிமம் பெற்றவர் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் மீன்பிடித்தல் அல்லது நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடவடிக்கை சம்பந்தமான தவறொன்றிற்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(ஈ) உரிமம் பெற்றவர், இச்சட்டத்தின் அல்லது 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் அல்லது அச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளவிடத்து ;

(உ) உரிமம் பெற்றவர், எந்நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கு அமைவாக அத்தகைய உரிமம் வழங்கப்பட்டதோ அந்நியதிகள் அல்லது நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது மீறி செயற்பட்டிருக்கின்றவிடத்து;

(ஊ) நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற் பாட்டைத் தொடர்வதானது சூழல் மீது மாறான தாக்கங்களைக் கொண்டிருக்கு மிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதியினால் இல்லாதாக்கப்படல் வேண்டும்.

(2) வழங்கப்பட்ட உரிமமொன்று 43அ என்னும் பிரிவின் அல்லது அப்பிரிவின்கீழ் விடயத்திற் கேற்ப, இடைநிறுத்தப்படுமிடத்து அல்லது இல்லாதாக்கப்படுமிடத்து உரிமம் பெற்றவரால் வழங்கப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படும் எழுத்தினாலான தெரிவிப்பு மூலம் அத்தகைய இடைநிறுத்தம் அல்லது இல்லாதாக்கல் பற்றி உரிமம் பெற்றவருக்கு உடனடுத்து அறிவிப்பது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

தெரிவிக்கப்பட வேண்டிய காரணங்கள்.

43இ. விடயத்திற்கேற்ப 41 அல்லது 43 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்றை வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று மறுக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய மறுப்புக்கான காரணங்கள், எவ்வுரிமமளிக்கும் அலுவலருக்கு, வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதோ அவ்வுரிமமளிக்கும் அலுவலரால் பதிவு செய்யப்படல் வேண்டும். அத்தகைய மறுப்புக்கான காரணங்களை, விண்ணப்பத்தில் தோன்றும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படும் எழுத்திலான தெரிவிப்பு ஒன்றின் மூலம் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஆளுக்கு அறிவிப்பது, அத்தகைய உரிமமளிக்கும் அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

மேன்முறையீடுகள்.

43ஈ. (1) விடயத்திற்கேற்ப உரிமமொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க மறுக்கும் முடிபொன்றினால் அல்லது வழங்கப்பட்ட உரிமமொன்றின் இடைநிறுத்தம் அல்லது இல்லாதாக்கலினால் இன்னலுற்ற ஆளெவரும், விடயத்திற்கேற்ப மறுப்பு அல்லது இடைநிறுத்தம் அல்லது இல்லாதாக்கல் பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கும் எழுத்திலான தெரிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கெதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மீதான முடிபு, அத்தகைய மேன்முறையீட்டை பெற்றுக்கொண்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளாக செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டைச் செய்யும் ஆள், அதன் மீது செய்யப்பட்ட முடிபுபற்றி உடனடுத்து அறிவிக்கப்படல் வேண்டும்.

(3) அமைச்சரின் அமைச்சர் செயலாளர், அது தோதானதெனக் கருதுமிடத்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் அவருக்குச் செய்யப்பட்ட ஏதேனும் மேன்முறையீடு மீதான ஏதேனும் முடிபுக்கு வருமுன்னர் விடயத்தின் சூழ்நிலைகளில் அவசியம் எனக் கருதுகின்றவாறான அத்தகைய விசாரணையை நடாத்தலாம்.

(4) இப்பிரிவின்கீழ் ஏதேனும் மேன்முறையீடு மீதான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

உரிமமளிக்கும் அலுவலர்களுக்கெதிரான முறைப்பாடுகள்.

43உ. (1) உரிமமளிக்கும் அலுவலரின் நடவடிக்கைகளில் அதிருப்தியுறுகின்ற ஆள் எவரும் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு எழுத்தில் முறைப்பாடொன்றை முற்போடலாம் என்பதுடன் அத்தகைய முறைப்பாட்டை

விசாரணை செய்வதற்கும் தோதானவாறாக அத்தகைய எல்லா நடவடிக்கையையும் எடுப்பது தொடர்பில் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை அதிகாரசபைக்கு விதந்துரைப்பதும் பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், உரிமமளிக்கும் அலுவலர் ஒருவருக்கெதிராகச் செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டை விசாரணை செய்த பின்னரும் சூழ்நிலைகளில் தோதானதெனத் தோன்றுமிடத்தும் உரிமமளிக்கும் அலுவலர் பதவியிலிருந்து அத்தகைய அலுவலரை அகற்றுவதற்கு, பணிப்பாளர் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்.

*அதிகாரச் சபைக்குச் சேகரிக்கப் பட்ட கட்டணங்களை வரவு வைத்தல்.*

43ஊ. விடயத்திற்கேற்ப 41 மற்றும் 43 ஆம் பிரிவின்கீழ் எவையேனும் உரிமங்களை வழங்குவதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக கட்டணங்களாக சேகரிக்கப்பட்ட எல்லாத் தொகைகளையும் அதிகாரசபையின் நிதியத்துக்கு மாதாந்தம் வரவுவைப்பது பணிப்பாளர் தலைமையதிபதியின் கடமையாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் VII ஆம் பாகத்தின் தலைப்பை மாற்றீடு செய்தல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவின் நேர்முந்திய VII ஆம் பாகத்தில் தோன்றும் தலைப்பு இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாக பின்வரும் தலைப்பு இடப்படுகின்றது.

"பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்"

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தில் 45 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 45அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

*"நீர்வாழ் உயிரின வளர்ப்புப் பிணக்குகள்.*

45அ. (1) நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாடு ஒன்று சம்பந்தமான ஏதேனும் பிணக்கு எழுமிடத்து அல்லது எழும் என அஞ்சப்படுமிடத்து அத்தகைய பிணக்கு, விசாரித்து தீர்த்து வைப்பதற்கு, அந்நோக்கத்திற்காக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவருக்கு பணிப்பாளர் தலைமையதிபதியால் ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவர் விசாரணையொன்றை நடாத்துகையில் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரினால் உதவியளிக்கப்படலாம்.

(2) நாற்பத்து நான்கு மற்றும் 45 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பிணக்கொன்றின் நடத்தை மற்றும் தீர்வு தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவொன்று இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 49அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :

*"நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாடுகள் தொடர்பான தவறுகள்.*

49அ.

(அ) செல்லுபடியான உரிமமொன்று அன்றி ஏதேனும் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற;

(ஆ) உரிமம்பெற்றவராக இருந்துகொண்டு, ஏதேனும் நிலத்தின் சூழல் தன்மையைப் பாதிக்கின்றவாறான அத்தகைய முறையில் அந்நிலத்திற்கு அல்லது ஏதேனும் உள்நாட்டு பெருநீர்ப்பரப்புக்கு ஏதேனும் நச்சுத்தன்மையுள்ள, அருவருப்பூட்டும் அல்லது அபாயம் விளைவிக்கும் பொருள் அல்லது பதார்த்தத்தினை வெளிவிடுகின்ற, கழித்தொதுக்குகின்ற, தேக்கிவிடுகின்ற, வெளியேற்றுகின்ற அல்லது

வெளிவிடுவதை, கழித்தொதுக்குவதை, தேக்கிவிடுவதை அல்லது வெளியேற்று வதை அனுமதிக்கின்ற ;

(இ) உரிமம்பெற்ற ஒருவராக இருந்துகொண்டு சூழல்மீது மாறான விளைவைக் கொண்டிருக்கும் ஏதேனும் செயலை செய்கின்ற ;

(ஈ) நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாட்டை கொண்டுநடாத்துகின்றவரும் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரினால் தகவல் அளிக்க சட்டரீதியாக தேவைப் படுத்தப்பட்டபோது மறுக்கின்ற அல்லது ஏதேனும் விடயத்தில் பொய்யான சரியற்ற அல்லது தவறாக இட்டுச்செல்லும் தகவலை வழங்குகின்ற ;

(உ) இச்சட்டத்தின்கீழ் தனது கடமைகளை நிறைவேற்றுகின்ற அல்லது தனது தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரை நோக்கி துஷ்பிரயோகமான அல்லது அச்சுறுத்தும் மொழியைப் பயன்படுகின்ற அல்லது இழிவுபடுத்தும் சைகைகளை உபயோகிக்கின்ற அல்லது அச்சுறுத்தும் பாங்கொன்றில் நடந்துகொள்கின்ற ;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் தனது கடமைகளைப் புரிகையில் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரை தாக்குகின்ற அல்லது தடுக்கின்ற ;

(எ) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட சட்டரீதியான அறிவுறுத்தல் அல்லது பணிப்பு ஒவ்வொன்றுடனும் உடனடியாகவும் முழுமையாகவும் இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது புறக்கணிக்கின்ற ;

(ஏ) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரால் தன்னை ஆள்மாறாட்டம் செய்கின்ற அல்லது பொய்யாக பிரதிநிதித்துவம் செய்கின்ற ; அல்லது

(ஐ) தனது கடமைகளைப் புரிகையில் ஏதேனும் வகையில் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவருடன் தலையிடுகின்ற,

ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் பதினெட்டு மாதங்களுக்குக் குறையாததும் முப்பத்தாறு மாதங்களை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தையாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 57அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் சட்டவாக்கத்தின் 57அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :

*"விதிக்கப்படும் குற்றப் பணத்தின் ஐம்பது சதவீதம் அதிகார சபைக்கு வரவு வைக்கப்படுதல்.*

57அ. வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக இருப்பது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் 49 ஆம் பிரிவின்கீழ் தவறொன்று புரியப்பட்டமைக்காக நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒவ்வொன்றினதும் ஐம்பது வீதம் அதிகார சபையின் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 58அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

*"உரிமமளிக்கும் அலுவலர்கள் ஆளடையாள எண்பிப்பைக் காண்பிக்கத் தேவைப் படுத்தப்படல்.*

58.அ (1) உரிமமளிக்கும் அலுவலர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் தனது கடமைகளைப் புரிகையில் தனது பதவியை வெளிப்படுத்தத் தேவைப்படுத் தப்படல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக உரிமமளிக்கும் அலுவலர் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என எண்பிப்பதற்கு நியாயமானளவு போதுமானதாகக் கூடியவாறான அத்தகைய ஆளடையாளத்தைக் காண்பித்தலும் வேண்டும்.

(2) உரிமமளிக்கும் அலுவலர் இச்சட்டத்தின்கீழ் உரிமம் அளிக்கும் அலுவலர் ஒருவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என அத்தகைய அலுவலர் தனது பதவியை வெளிப்படுத்தத் தவறினால், அல்லது எண்பிப்பதற்கு நியாயமானளவு போது மாகக்கூடியவாறான அத்தகைய ஆளடை யாளத்தை காண்பிக்கத் தவறினால் உரிமமளிக்கும் அலுவலர் ஒருவரினால் செய்யப்படும் ஒரு வேண்டு கோளுக்கு, கோரிக்கைக்கு அல்லது கட்டளைக்கு ஆளெவரும் இணங்கியொழுக மறுப்பது இச்சட்டத் தின்கீழ் தவறொன்றாதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ட) என்னும் பந்தியை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது :–

(1) "நீரியற் பொருட்களைப் பண்படுத்தல்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு பின்வரும் வரைவிலக்கணத்தை அதற்குப் பதிலிடு வதன் மூலமும் :–

"நீரியற் பொருட்களைப் பண்படுத்தல்" என்பது மீன் அல்லது வேறு உயிர்வாழும் நீரியல் வளங்க ளின் வேளாண்மை இனப்பெருக்கம் அல்லது உற் பத்தி, அத்துடன் முட்டைகள், சினைகள், குடம்பி

கள் அல்லது விதைகளிலிருந்தான வேளாண்மை, இனப்பெருக்கம் அல்லது உற்பத்தியையும் அல்லது காட்டிலிருந்து சட்டமுறையாக எடுக்கப்படும் அல்லது நாட்டினுள் சட்டமுறையாக இறக்குமதி செய்யப்படும் மீன் அல்லது நீர்வாழ் உயிரின தாவரங்கள் அல்லது நீர்வாழ் உயிரின வளங்களின் வளர்ப்பினாலான அல்லது வேறு அதையொத்த முறையினாலான வேளாண்மை, இனப்பெருக்கம் அல்லது உற்பத்தியையும் உள்ளடக்கும் ;";

(2) "நீரியற் பொருட்களை பயன்படுத்தற் தொழில் முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்குவதன்மூலம் ;

(3) "நீர்வாழ் உயிரின ஊடகம்" என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூல மும் :-

"நீர்வாழ் உயிரின வளர்ப்புத் தொழிற்பாடு" என் பது வர்த்தக நோக்கங்களுக்காக மீன் உட்பட நீர்வாழ் உயிரின தாவரங்கள், உயிர்பொருட்கள் அல்லது மீனின் வேளாண்மைக்காக அமைக்கப்பட்ட அல்லது பயன்படுத் தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பு, அடைப்பு, குளம், மூடி வைக்குமிடம், வளவு அல்லது அமைப்பில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நடத்துகை எனப் பொருள்படும் என்பதுடன் முத்துச்சிப்பி அல்லது கிளிஞ்சல் வேளாண்மைக் காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் படுக்கை அல்லது தெப்பம் அல்லது வேறு அமைப்பையும் உள்ளடக்கும் ;";

(4) "நீர்வாழ் உயிரின வளங்கள்" என்னும் சொல்ல மைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

"அதிகாரசபை என்பது 1998 ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியற் பொருட் களை பயன்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச்

*சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேசிய நீரியற் பொருட்களை பயன்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை எனப் பொருள்படும் ;";*

(5) "*மீன்*" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :–

"*மீன்*" *என்பது உயிருள்ள அல்லது அற்ற ஏதேனும் நீரில் வாழும் நீர்வாழ் உயிரின அல்லது கடல் விலங்கு எனப் பொருள்படும் என்பதுடன் அவற்றின் முட்டைகள், சினைகள், குடம்பிகள் மற்றும் பால்ய பருவங்கள் மற்றும் அவற்றின் ஏதேனும் பாகங்கள் அத்துடன் அமர்வியற் பாங்குடை இனங்களுக்குரிய எல்லா உயிர்பொருட்களையும் உள்ளடக்குகிறது ;"; அத்துடன்*

(6) "*விற்பனை*" என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தை உடனடுத்து பின்வரும் புதிய வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

"*அமர்வியற் பாங்குடை இனங்கள்*" *என்பது அறுவடைப் பருவத்தில், கடல் அல்லது நீரின் படுக்கைமீது அல்லது கீழ் நடமாடாத அல்லது விடயத்திற்கேற்றவாறாக, கடல் அல்லது நீரின் அடித்தளம் அல்லது படுக்கையுடன் இடையறாத உடல்சார் தொடர்புபற்றி அசைய இயலாத ஏதேனும் கடல் அல்லது நீர்வாழ் உயிரினங்கள் எனப் பொருள்படும் .".*

**11.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*